**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்குநேரி**
**முன்னிலை - திருமதி.ச.மஞ்சுளா, பி.ஏ., எல்.எல்.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நான்குநேரி.**
**2026ம் வருடம் ஜனவரி திங்கள் 20ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**இடையீட்டு மனு எண்.3/2024 இன்**
**அசல் வழக்கு எண்.59/2024**

அன்னபூரணி .... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

J. தாவீது நாடார் ...எதிர்மனுதார்/வாதி

இம்மனு என் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.காஞ்சனா.எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுபாஷ்.எம்.எஸ்சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், மனுவை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவில் கண்ட விவரப்படி பிராதில் சீர்திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2. மனுவின் சுருக்கம்** - ;

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் வாதியின் வீடு வழக்கு தபசில் சொத்தின் வடக்கு பக்கத்தில் அமைந்துள்ளது என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் அதற்கு பதிலாக பிரதிவாதியின் வீடு தபசில் சொத்தின் வடக்கு பக்கம் உள்ளது என்று திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சுருக்கம் -**

மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தபசில் சொத்திற்கு வடக்கு பக்கம் வாதியின் வீடு உள்ளது என்று தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும், உண்மையில் பிரதிவாதியின் வீடு

அமைந்திருக்கிறது என்றும், எனவே மேற்படி தவறினை திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது ஏற்புடையதல்ல என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இம்மனுவின் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை.6 விதி 17ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என பார்க்கும் போது

**5.** மனுதாரரின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தபசில் சொத்தின் விவரம் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ள தவறை திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

> **Amendment of pleadings:** The court may at any stage of the proceedings allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real questions in controversy between the parties.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை.6 விதி.17யை பரிசீலனை செய்கையில், இருதரப்பினர்களுக்கிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்மானிக்கும் பொருட்டு வழக்கின் எந்த நிலையிலேயும் பிராது அல்லது எதிர்வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்கலாம் என்பது புலப்படுகிறது. மேலும் மனுதாரர் கோரியுள்ள திருத்தத்தால் வழக்கானது எவ்வித பாதிப்படையாது என்பதாலும், வழக்கின் தன்மைக்கு மனுதாரர் கோரியுள்ள திருத்தங்களை எதிர்வழக்குரையில் மேற்கொள்வதனால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருத்தம் பிரதிவாதியின் வழக்கிற்கு அவசியமானது தெரிவித்திருந்த நிலையில் இம்மனுவினை அனுமதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்த நீதிமன்றம் கருதியும், மேலும் வழக்கினை துரிதமாக முடிக்கும் நோக்கத்துடன் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.

2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20ம் நாள் என்னால் இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2026.01.21 17:10:36 -0900

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நான்குநேரி.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2026.01.21 17:10:40 -0900

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நான்குநேரி.